## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2011/2012 (பெப்ரவரி/மார்ச் 2014)

### EDUS 2202 பிள்ளை வளர்ச்சியும் கற்றலும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01.(அ) பிள்ளை விருத்தியுடன் தொடர்புறும் பண்புகள் நான்கினைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக?

(12 புள்ளிகள்)

(ஆ) பிள்ளை விருத்தி பற்றிய கொள்கைகளுள் சூழல் சார் கற்றல் கொள்கை பெறும் முக்கியத்துவத்தினை ஆராய்க?

(13 புள்ளிகள்)

02.(அ) ஆளுமை, நுண்ணறிவு விருத்தியில் பரம்பரையின் செல்வாக்கினை விளக்குக?

(10 புள்ளிகள்)

(ஆ) "வளர்ச்சி, முதிர்ச்சி, கற்றல் ஆகிய உடற் தொழிற்பாடுகள் சூழல், பரம்பரை ஆகிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டன." பிள்ளை விருத்தியில் இவை எவ்வாறான இடைத் தொடர்புகளைக் கொண்டுள்ளன என்பதை ஆராய்க?

(15 புள்ளிகள்)

03.(அ) முதிர் மூலவுருவில் பிறப்புரிமையின் செல்வாக்குக் காரணமாக ஏற்படும் குறைபாடுகளில் டவுண் குறிப்பிடும் குறைபாடு (Down's Syndrome) குறைபாடு எவ்வாறு ஏற்படுகின்றதென்பதை தெளிவாக விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) "பிள்ளையின் பிறப்பிற்கு முன்னுள்ள விருத்தியில் காணப்படும் சமூக வகுப்பு வேறுபாடுகள் பிறப்பிற்குப் பின்னுள்ள விருத்தியிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன." இக்கருத்துக்கு ஆதாரமான விடயங்களை முன்வைத்து நுணுகி ஆராய்க.

(10 புள்ளிகள்)

04.(அ) முன் குழந்தைப் பருவத்தில் ஏற்படும் பின்வரும் விருத்திகள் தொடர்பாக தெளிவாக விளக்குக.

i. புலனுணர்ச்சிகளின் வளர்ச்சி

ii. சமூக மனவெழுச்சி வளர்ச்சி

iii. மொழி வளர்ச்சி

(15 புள்ளிகள்)

(ஆ) பிள்ளையின் சமூக விருத்தியில் குடும்பத்தின் பங்களிப்பினை மதிப்பிடுக.

(10 புள்ளிகள்)



(டெ.ப.ச0)

05.(அ) பாடசாலைப் புகாநிலைப் பிள்ளையிடம் எழுகின்ற எதிர் மறையான மனவெழிச்சிப் பண்புகளைக் குறிப்பிட்டு, அவற்றை ஒரு முன்பள்ளி ஆசிரியர் எவ்வாறு கற்றலுக்குச் சாதகமாகப் பயன்படுத்தலாம் எனப் பகுத்தாராய்க?

(15 புள்ளிகள்)

(ஆ) ஆளுமை விருத்தி பற்றிய அணுகு முறைகளுள் உயிரியல் அணுகுமுறை பற்றிச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்குக.

(10 புள்ளிகள்)

06. பின்வருவன பற்றி விளக்கக் குறிப்புக்கள் எழுதுக.

i. ஆசாதாரண நிலமைகளில் பரம்பரையின் செல்வாக்கு
ii. பிள்ளையின் கற்றலுக்கான ஆயத்த நிலை
iii. முதிர் மூலவுருப் பருவம்
iv. பின் குழந்தைப் பருவத்தினரின் சமூக விளையாட்டுச் செயற்பாடுகள்
v. ஆளுமை விருத்தி பற்றிய சுய எண்ணக்கரு அணுகு முறை

(5x5=25 புள்ளிகள்)